07.01.2019.அ.வ.எண்.234/2012

வா.சா.1, பினேஷ்

2 மற்றும் 3 பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதி என்னுடைய தந்தை ஆவார். எனது தந்தை இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.520/2011 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார். அவ்வழக்கு சொத்தும் இவ்வழக்கின் சொத்தும் ஒன்று தான் என்றால் சரிதான். அ.வ.எண்.520/ 2011 வழக்கிலும் இவ்வழக்கிலும் எங்களுக்கு ஒரே வழக்கறிஞர் தான் என்றால் சரிதான். அந்த வழக்கினை எனது தந்தை தாவா சொத்திலிருந்து எங்களை சட்டத்திற்கு புறம்பாக எங்களை வெளியேற்ற முற்பட்டதனால் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கினை எனது தந்தை ராமு என்பவருக்கு ஒரு பொது அதிகரா பத்திரத்தை ரத்து செய்யவும் இவ்வழக்கின் 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு இடையே ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்யவும் தான் அந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். ஆவணங்களை ரத்து செய்ய வேண்டி அவ்வழக்கினை தாக்க்ல் செய்திருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது தான் 1ம் பிரதிவாதி வாதிகளான எங்கள் இருவர் பெயரிலும் செட்டில்மெண்டு ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் சரிதான். இவ்வழக்கின் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தப்பட்ட பின்பு தான் எங்களின் பெயருக்கு செட்டில்மெண்டு பத்திரம் ஏற்படுத்தினார் என்றால் சரிதான்.

(பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)